27-02-2019 OS 101/2017 PW1 ரவி

வாதி தரப்பில் முதல் விசாரணைதொடர்ச்சி

நான் இம்மனுவின் முதல்வாதி . எனது முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள நீதிமன்றத்தை வேண்டுகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 2-09-1936 அன்று நீதிமன்ற ஏலத்தின் மூலம் கிரையம் பெற்ற ஆவணத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 1. தாவா சொத்தின் செட்டில்மெண்ட் பட்டா தாக்கல் செய்கிறேன்.அது வாசாஆ 2. தாவா சொத்திற்கான 1387 பசலிக்கான சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 3. தாவா சொத்திற்கான 1387 பசலிக்கான சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 4. தாவா சொத்திற்கான 1397 பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 5. தாவா சொத்தை எனது பெரியப்பா சுந்தராஜநாயுடு ராமகிருஷ்ண நாயுடுவிடம் வைத்த அடமான பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அதுவாசாஆ 6. எனது சித்தப்பா ஜெயராமின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 7. எனது பெரியப்பா சுந்தர்ராஜன் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 8. எனது தந்தை கோவிந்தராஜின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 9. என் தந்தையின் வாரிசுகளாக விளம்புகை செய்யகோரி நாங்கள் தாக்கல் செய்த அ.வ எண் 792/12 வழக்கில் 21-12-2012 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 10. நான் 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 11. தாவா சொத்துக்கள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் பெற்ற 23-02-2015 தேதியிட்ட பதில் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 12. 1 ம் பிரதிவாதி மீது பட்டா தாக்கலாகி உள்ளதை எதிர்த்து நானும் 4 ம் வாதியும் தாக்கல் செய்த அப்பீல் மனுவின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 13. மேற்படி மேல்முறையீட்டு மனுவில் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த 27-04-2017 தேதியிட்ட உத்தரவு தாக்கல் செய்கிறேன். அதுவாசாஆ 14. 7,8,9 பிரதிவாதிகள் தாக்கல் செய்த கேவியேட் மனுவின் எனக்கு சார்வு ஆன நகல் தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 15. கிருஷ்ணசாமி நாயுடுவின் வாரிசுகளை காண்பிக்ககூடிய கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 16. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு,
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து
பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்து காண்பித்து
அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்/கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி
மதுரை